பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
08 10 2025 WEDNESDAY 12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தொலைத்தொடர்பு துறையில் நாட்டின் வளர்ச்சி, சுயசார்பு இந்தியா இயக்கத்தின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்
- இந்திய விமானப் படை தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்திய விமானப்படை வீரர்கள் சிறப்பாக செயல்பட்டதாக விமானப்படை தலைமைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் கூறியுள்ளார்.
- இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வந்தடைந்தார்.
- உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<

தொலைத்தொடர்பு துறையில் நாட்டின் வளர்ச்சி, சுயசார்பு இந்தியா இயக்கத்தின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்திய தொலைத்தொடர்பு மாநாட்டை புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாட்டின் அனைத்து தரப்பு மக்களையும் டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவை சென்றடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்தியா உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய 5ஜி மற்றும் தொலைத்தொடர்பு வணிகமாக உருவெடுத்துள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது 5-ஜி சேவை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, உலக அளவில் டிஜிட்டல் தொலைத்தொடர்பில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக கூறினார்.*

*கடந்த 2014ஆம் ஆண்டு 6 கோடி பேருக்கு இணையதள சேவை வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது 94 கோடியே 40 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.*

*உலக அளவில் கைபேசி பயன்படுத்துவோரின் எண்ணிக்கையில் 20 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளதாக திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.*

*>>>>>>>><<<<<<*

*இந்திய விமானப் படையின் 93வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், விமானப்படை வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.*

*இந்திய விமானப்படை வீரர்கள் வான் எல்லையை பாதுகாத்து, நாட்டுக்கு அயராத சேவையை ஆற்றி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை, நமது விமானப்படையின் பங்களிப்புக்கு எடுத்துக் காட்டாக உள்ளதாக கூறியுள்ளார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், இந்திய விமானப்படை வீரர்களின் தைரியம், துணிச்சல் மற்றும் கடமை உணர்வு பாராட்டுதலுக்குரியது என்று கூறியுள்ளார்.*

*மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. நிதின் கட்கரி, இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்ட தலைவர்களும் இந்திய விமானப் படையினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

இந்நாளையொட்டி புதுதில்லியில் உள்ள தேசிய போர் வீரர்கள் நினைவுச் சின்னத்தில் முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் மற்றும் ராணுவம், விமானப்படை, கடற்படையின் தலைமை தளபதிகளும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

>>>>>>><<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்திய விமானப்படை வீரர்கள் சிறப்பாக செயல்பட்டதாக விமானப்படை தலைமைத் தளபதி ஏர்சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் தெரிவித்துள்ளார்.

காஸியாபாத், *Hindon* விமானப்படை தளத்தில் இந்திய விமானப்படை தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், விமானப்படை வீரர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை நாட்டு மக்களுக்கு பெருமை சேர்த்துள்ளதாக கூறினார்.

1947ல் கஷ்மீரை பாதுகாத்ததிலும், பாகிஸ்தானுக்கு எதிரான 1971ம் ஆண்டு போரிலும், கார்கில் போரிலும் இந்திய விமானப்படை வீரர்களின் சாதனைகளை ஏர்சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் எடுத்துரைத்தார்.

>>>>>>><<<<<<

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் தென்னிந்திய பக்தர்களுக்காக சீரமைக்கப்பட்ட *Brihaspati Kund* புனித குளத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று மாலை திறந்து வைக்கிறார்.

அயோத்தியாவில் உள்ள 108 புனித குளங்களில் ஒன்றான *Brihaspati Kund*, 4 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது.

மேலும், தென்னிந்திய இசைமேதைகளான தியாகராஜ சுவாமிகள், புரந்தர தாஸர், அருணாச்சல கவிராயர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளையும் திருமதி நிர்மலா சீதாராமன் திறந்து வைக்கவுள்ளார்.

>>>>>>><<<<<<

இந்தியா-கத்தார் இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

*தோஹாவில் நேற்று கத்தார் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. Ahmed Bin Mohamed-உடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், இருநாட்டு வர்த்தகம் குறித்தும், பொருளாதார பங்களிப்பு குறித்தும் பேச்சுக்கள் நடத்தினார்.*

*>>>>>>><<<<<<*

*இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வந்தடைந்தார்.*

*மும்பை விமான நிலையம் வந்தடைந்த அவரை, மஹாராஷ்ட்ர மாநில ஆளுநர் திரு. ஆச்சார்யா தேவ்ரத் மற்றும் முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் உள்ளிட்டோர் வரவேற்றனர்.*

*மும்பையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியை நாளை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேசவுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம், சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.*

*மும்பையில் நடைபெறவுள்ள உலக நிதி தொழில்நுட்ப மாநாட்டிலும் இரு நாட்டு தலைவர்களும் உரையாற்றவுள்ளனர்.*

*>>>>>>><<<<<<*

*ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நியூயார்க் சென்றடைந்தது.*

*பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினரும், ஒரே நாடு ஒரே தேர்தல் கூட்டு நாடாளுமன்றக் குழு தலைவருமான திரு. பி.பி. சௌத்ரி தலைமையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் அந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.*

*இவர்கள் ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்று, இந்தியாவின் சார்பில் கருத்துக்களை எடுத்துரைக்கவுள்ளனர்.*

*>>>>>>><<<<<<*

***இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக திரு. Sergio Gor தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.***

***அமெரிக்க நாடாளுமன்றத்தில் தூதர் பதவிக்காக 107 பேர் பரிந்துரை செய்யப்பட்டதை அடுத்து, 51 செனட் உறுப்பினர்கள் திரு. Sergio Gor-க்கு ஆதரவாக வாக்களித்தனர்.***

***இதனையடுத்து, அவர் இந்தியாவுக்கான புதிய அமெரிக்க தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.***

>>>>>>><<<<<<

***இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நிலையான சீர்திருத்தம் மிகவும் அவசியம் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.***

***கொழும்பில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்த உலக வங்கி, இலங்கையின் பொருளாதார வளரச்சி, நடப்பாண்டு 4 புள்ளி ஆறு சதவீதமாக இருக்கும் என்றும், அடுத்த ஆண்டு 3 புள்ளி ஐந்து சதவீதமாக குறையும் என்றும் கூறியுள்ளது.***

***வர்த்தகம், வரி வசூல், முதலீடு, வேலைவாய்ப்பு உள்ளிட் பல்வேறு துறைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உலக வங்கி அறிவுறுத்தியுள்ளது.***

>>>>>>><<<<<<

***வியட்நாமில் Matmo சூறாவளிக் காற்று மற்றும் கனமழை காரணமாக 8 பேர் உயிரிழந்தனர்.***

***15 ஆயிரத்து 700 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியதாக வியட்நாம் அரசு தெரிவித்துள்ளது.***

***மேலும், 14 ஆயிரத்து 600 ஹெக்டேர் நிலம் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.***

***இந்நிலையில், வியட்நாம் பிரதமர் திரு. Pham Minh Chinh தலைமையில், மீட்புப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.***

>>>>>>><<<<<<

***அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் தீபாவளி பண்டிகையை ஒட்டி அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.***

***அமெரிக்காவின் Pennsylvania, Connecticut மாகாணங்களுக்குப் பிறகு, தீபாவளி பண்டிகைக்கு விடுமுறை அளிக்கும் மூன்றாவது மாகாணம் கலிஃபோர்னியா ஆகும்.***

*இதற்காக கலிஃபோர்னியா மாகாண பேரவை உறுப்பினர் திரு. Ashkalra கொண்டு வந்த மசோதாவுக்கு, ஆளுநர் திரு. Gavin Newsom ஒப்புதல் அளித்துள்ளார்.*

*இதனையடுத்து அம்மாகாணத்தில் அனைத்து பள்ளி மற்றும் அலுவலகங்களுக்கும் தீபாவளி அன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<*

*குவஹாத்தியில் நடைபெற்று வரும் உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.*

*எச்-பிரிவில் முதலிடத்தில் உள்ள இந்தியா, இப்போட்டியில் வெற்றி பெற்றால், நாக்அவுட் சுற்றுக்கு தகுதி பெறும்.*

*>>>>>>><<<<<<*

*ஆர்க்டிக் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஃபின்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் 22-20, 21-18 என்ற செட்கண்க்கில் தைவானின் Ching Ping Hung-ஐ வென்றார்.*

*>>>>>>><<<<<<*

*கொச்சியில் நடைபெற்று வரும் பார்வையற்றோருக்கான சர்வதேச மகளிர் கால்பந்துப் போட்டியில், இந்தியா 2-0 என்ற கோல்கணக்கில் போலந்தை வென்றது.*

*>>>>>>><<<<<<*

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-2 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் Sagandikova-வை வென்றார்.*

*>>>>>>><<<<<<*